Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

பாடம்:- வணிகக்கல்வி

வாரம்01

தயாரிப்பு:- S. A. S. டிலக்சனி (BBA)

இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

தரம்:12

**தேர்ச்சி** 7.0**:** வணிகங்களின் வாழ் தன்மைக்கும் வளர்ச்சிக்கும் பணம் மற்றும் நிதி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற பங்களிப்பு.

(01). இலத்திரனியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் வணிகக்கணக்குரிமையாளருக்கு தனது வங்கியினால் வழங்கப்பட்டிருக்கும் வசதிகளில் பெரும்பாலானவற்றை வங்கிகளுக்கு செல்லாது நாளில் எந்நேரத்திலும் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இலத்திரனியல் பண பரிமாற்ற முறை தன்னியக்க வங்கி சேவையாகும்.

I. தன்னியக்க வங்கி சேவையினால் வாடிக்கையாளருக்கு கிடைக்கும் நன்மைகள் யாவை?
II. தன்னியக்க வங்கி சேவையினால் வங்கிகளுக்கு கிடைக்கும் நன்மைகள் யாவை?

(02). இலத்திரனியல் முறையில் அல்லது கணினி வலையமைப்பின் ஊடாக பரிமாற்ற படுகின்ற பணம் இலத்திரனியல் பணம் எனப்படும்.

I. இலத்திரனியல் பணத்தின் வகைகளை குறிப்பிடுக.
II. இலத்திரனியல் பண கொடுக்கல் வாங்கல்களில் அனுகூலங்கள் பிரதிகூலங்களை குறிப்பிடுக.
III. இலத்திரனியல் பண அட்டையின் பண்புகள் ஐந்தினை தருக.
IV. இலத்திரனியல் பணத்தின் ஊடான கொடுக்கல் வாங்கல்களில் தொடர்புபடும் பிரிவினர்கள் குறிப்பிடுக.

(03). வைப்புக்களை ஏற்றல், கடன் வழங்கள் என்பவற்றுக்கு மேலதிகமாக வணிக வங்கிகள் வணிகங்களின் செயற்பாடுகளை ஏற்படுத்துகின்றன. அவ்வாறான பின்வரும் செயற்பாடுகள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

I. இலத்திரனியல் வங்கி சேவை
II. குத்தகை சேவை

III. இலத்திரனியல் அட்டைகளை பிரயோகித்தல்
IV. பயணிகள் காசோலை வழங்குதல்
V. தன்னியக்க வங்கி சேவை

(04).நடைமுறை வைப்பு உரிமையாளர் ஒருவரினால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு அல்லது கொண்டு வருபவருக்கு செலுத்துமாறு வங்கிக்கு இடும் எழுத்து மூலமான கட்டளைக் காசோலை எனப்படும்.

I. காசோலையுடன் தொடர்புடைய பிரதான பிரிவினர்கள் யாவர்?
II. காசோலை ஒன்றின் அடிப்படை பண்புகளின் வரிசைப்படுத்துக.
III. காசோலையின் பிரதான இரு வகைகளையும் குறிப்பிடுக.
IV. காசோலை ஒன்றை எழுதும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?

(05). காசோலையின் முகப்பில் குறுக்காக இரு சமாந்தர கோடுகளை வரைதல் அல்லது வணிக வங்கி ஒன்றின் பெயரை எழுதுதல் காசோலையில் கோடிடல் எனப்படும்.

I. காசோலையில் கோடிடல் முக்கியத்துவம் யாது என்பதை விபரிக்குக.
II. காசோலையில் கோடிடப்படும் இரு பிரதான வகைகளும் யாவை?
III. காசோலையில் புறங்குறிப்பிடுதல் என்பதால் கருதப்படுவது யாது?
IV. காசோலை ஒன்று மறுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் ஐந்திணை தருக.